(இ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகள் 21 (3) விதியின்கீழ் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளதற்கு மாறாக கீழ்க் கண்டபடி எடுத்துக் கொள்ளப்பட வேண்டு மென்று முன்மொழிகிறேன் :—

1. அரசினர் தனித் தீர்மானங்கள்
2. 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1971)
3. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/1971)
4. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971)
5. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971)
6. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971)
7. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1971)

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியினர் வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் குறித்த மாநில அரசு உத்தரவாதம் அளிக்கும் பேரளவுத் தொகையின் மொத்த மதிப்பை உயர்த்துவது குறித்து.

■ மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி அவ்வப்போது திரும்பப் பெற்றுக்கொள்ளும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் நீங்கலாக மேற்படி வங்கியினர் வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசு உத்தரவாதம் அளிக்கும் பேரளவுத் தொகையை தமிழ்நாடு 1934-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவின் (2) உட்பிரிவின்கீழ் ரூ. 125 கோடி (ரூபாய் நூற்றுஇருபத்தி ஐந்து கோடி மட்டும்) மொத்த மதிப்புக்கு உயர்த்தலாம் என்றும், அத்தகைய கடன் ஈட்டுப் பத்திரங்கள் எந்த ஒரு நேர்விலும் ஒவ்வொரு வரிசைக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளித்துள்ள வட்டி விதத்திற்கு மேற்படாத வட்டி வீதத்தி லும், வெளியிடப்படுகிற நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு வெளியிடப்படலாமென்றும், இந்தச் சட்டப் பேரவை மாநில அரசுக்குப் பரிந்துரைக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.